بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

## ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 03/01/2025 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்

**✪ வக்ஃபே ஜதீத் சந்தாவின் 67 ஆவது ஆண்டில் ஜமாஅத் மக்கள் முன்வைத்த பொருள் தியாகங்கள் பற்றிய குறிப்பு மற்றும் 68 ஆவது ஆண்டின் துவக்கம் பற்றிய அறிவிப்பு**

أَشۡهَدُ أَنۡ لَّاۤ إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحۡدَهٗ لَا شَرِيۡكَ لَهٗ وَأَشۡهَدُ أَنَّ مُحَمَّدًا عَبۡدُهٗ وَرَسُوۡلُهٗ۔ أَمَّا بَعۡدُ فَأَعُوۡذُ بِاللّٰهِ مِنَ الشَّيۡطٰنِ الرَّجِيۡمِ۔

بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ۞ اَلۡحَمۡدُ لِلّٰهِ رَبِّ الۡعٰلَمِيۡنَ ۞ اَلرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ۞ مٰلِكِ يَوۡمِ الدِّيۡنِ ۞

إِيَّاكَ نَعۡبُدُ وَإِيَّاكَ نَسۡتَعِيۡنُ ۞ اِهۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِيۡمَ ۞ صِرَاطَ الَّذِيۡنَ أَنۡعَمۡتَ عَلَيۡهِمۡ ۙ غَيۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَيۡهِمۡ وَلَا الضَّآلِّيۡنَ ۞

لَنۡ تَنَالُوا الۡبِرَّ حَتّٰى تُنۡفِقُوۡا مِمَّا تُحِبُّوۡنَ ۬ؕ وَمَا تُنۡفِقُوۡا مِنۡ شَیۡءٍ فَاِنَّ اللّٰهَ بِهٖ عَلِيۡمٌ

*சூரா ஆல இம்ரானின் 93 ஆவது வசனமான இந்த வசனத்தை ஓதி இதன் பொருளை எடுத்துரைத்தவாறு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:* “நீங்கள் விரும்புகின்றவற்றிலிருந்து இறைவழியில் செலவு செய்யாதவரை உங்களால் ஒருபோதும் முழுமையான நன்மையைப் பெற முடியாது. மேலும், நீங்கள் எதை செலவு செய்தாலும் அல்லாஹ் அதை நிச்சயமாக நன்கு அறிகிறான்.”

அல்லாஹ்வின் வழியைத் தேடிக் கொண்டிருக்கும் உண்மையான நம்பிக்கையாளர் ஒருவர் இறைநெருக்கத்தைப் பெறுவதற்கான வழிகளைத் தேட வேண்டும். அல்லாஹ்வின்வழியில் பொருளை செலவு செய்வதையும் அல்லாஹ் ஒரு நன்மையாகக் கூறியுள்ளான். இந்த வசனத்திலும், ‘நீங்கள் நேசிக்கின்ற செல்வத்தை நீங்கள் இறைவழியில் செலவு செய்வீர்களாயின், அப்போது இது பெரிய நன்மையாகும்’ என்ற கருத்தே உள்ளது. ஐயமின்றி, அல்லாஹ் எல்லா நன்மைகளுக்கும் வெகுமதி வழங்குகிறான்தான்; எனினும், மனிதனுக்கு செல்வத்தின் மீது அன்பு இருப்பதனால் அதன்பக்கம் சிறப்பு கவனமூட்டப்பட்டுள்ளது.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இந்த வசனத்தைப் பற்றி கூறுகிறார்கள்:** “செல்வத்தின் மீது அன்பு இருக்கக் கூடாது. ‘நீங்கள் விரும்புகின்றவற்றிலிருந்து அல்லாஹ்வின் வழியில் செலவு செய்யாதவரை உங்களால் ஒருபோதும் நன்மையைப் பெற முடியாது’ என்று அல்லாஹ் கூறுகிறான். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களின் காலத்தோடு இந்தக் காலத்தை ஒப்பிட்டால் பரிதாபம் ஏற்படுகிறது. ஏனென்றால், உயிரை விடப் பிடித்தமானது எதுவுமில்லை.

மேலும், அந்தக் காலத்தில் உயிரைத்தான் கொடுக்க வேண்டி வந்தது. உங்களைப் போன்று அவர்களுக்கும் மனைவி மக்கள் இருந்தார்கள். உயிர் எல்லார்க்கும் பிடித்தமானதாக உள்ளது. ஆனால், அவர்கள் எப்பொழுதும் வாய்ப்பு கிடைத்தால் அல்லாஹ்வின் வழியில் (உயிரை) அர்ப்பணித்துவிட வேண்டும் என்ற ஆவலில் இருந்து வந்தார்கள்.”

**ஹுஸூர் (அலை) அவர்கள் கூறினார்கள்:** “பயனற்ற, வீணான பொருள்களை செலவு செய்து எந்த மனிதனும் நன்மை செய்வதாக வாதிக்க முடியாது. நன்மையின் வாசல் குறுகலானது. எனவே, வீணான பொருள்களை செலவு செய்து எவரும் அதில் நுழையமுடியாது என்ற விஷயத்தை நன்றாக நினைவில் நிறுத்திக் கொள்ளுங்கள். ஏனென்றால், திருக்குர்ஆனில் தெளிவாக لَنْ تَنَالُوا الْبِرَّ حَتّٰى تُنْفِقُوْا مِمَّا تُحِبُّوْنَ என்று கூறப்பட்டுள்ளது. மிக மிக விருப்பமான, நேசத்திலும் நேசமான பொருளை செலவு செய்யாதவரை இறைவனுக்குப் பிடித்தமானவராக, அன்பராக இருக்கும் தரத்தைப் பெற முடியாது.”

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** “கண்ணியத்திற்குரிய சஹாபா (ரிஸ்வானுல்லாஹி அலைஹிம் அஜ்மயீன்) இலவசமாக இந்தத் தரத்தை அடைந்து விட்டார்களா? உலகப் பட்டங்களைப் பெறுவதற்காக எவ்வளவு செலவுகளையும், துன்பங்களையும் சகித்துக் கொள்ள வேண்டி வருகிறது. பிறகுதான் மனநிறைவும், மனநிம்மதியும் கிடைக்க முடியாத ஒரு சாதாரண பட்டம் கிடைக்கிறது. பிறகு, உள்ளத்துக்கு ஆறுதல் அளிக்கக்கூடிய, இதயத்துக்கு நிம்மதி அளிக்கக்கூடிய, கருணையுள்ள எஜமானனின் திருப்திக்கு அடையாளமான ‘ரலியல்லாஹு அன்ஹும் (அல்லாஹ் அவர்கள் மீது திருப்தியடைந்தான்)’ என்ற பட்டம் வெறுமனே எளிமையாகக் கிடைத்து விட்டதா என்று சிந்தித்துப் பாருங்கள்.”

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** “இறைவனை ஏமாற்ற முடியாது. இறைவிருப்பத்தைப் பெறுவதற்காக சிரமங்களைப் பற்றி கவலைப்படாதவர்கள் நற்பேறு பெற்றவர்கள் ஆவார்கள். ஏனென்றால், என்றென்றைக்குமான மகிழ்ச்சியும், நிரந்தரமான நிம்மதியின் ஒளியும் இந்தத் தற்காலிக சிரமத்திற்குப் பிறகுதான் நம்பிக்கையாளருக்குக் கிடைக்கின்றன. உலகத்தில் மனிதன் செல்வத்தை மிக அதிகமாக நேசிக்கிறான். இதனாலேயே கனவுகளுக்கு விளக்கம் அளிக்கும் நூலில், ‘ஒருவர் கனவில் கல்லீரலை எடுத்து யாருக்காவது கொடுப்பது போன்று பார்த்தால், அதன் பொருள் செல்வமாகும்’ என்று எழுதப்பட்டுள்ளது.”

உண்மையான நன்மையைச் சென்றடைவதற்கு மிகவும் பிடித்தமான பொருளை செலவு செய்வது அவசியமாகும் என்ற இரகசியத்தை இன்று அஹ்மதிய்யா ஜமாஅத் மக்கள் சரியான முறையில் புரிந்துள்ளார்கள். நிச்சயமாக இது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் தர்பிய்யத்தின் தாக்கமாகும். அதாவது, இன்று வரை இந்தத் தியாகங்களுக்கான தரத்தை நாம் பார்த்துக் கொண்டே செல்கிறோம்.

சஹாபா (ரிஸ்வானுல்லாஹி அலைஹிம் அஜ்மயீன்) நிலைநாட்டிய அந்தத் தரம், பிறகு அவற்றை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் காலத்தில் அன்னாருடைய சஹாபா (ரலியல்லாஹு அன்ஹும்) நிலைநாட்டினார்கள். அதற்குப் பிறகு, கிலாஃபத்தின் ஒவ்வொரு காலகட்டத்திலும் நாம் இந்தத் தியாகங்களைப் பார்த்துக் கொண்டே செல்கிறோம். இன்று வரை இதே தியாகங்கள் நமக்குத் தென்படுகின்றன.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** “கருமித்தனமும் ஈமானும் ஓர் உள்ளத்தில் ஒன்றிணைய முடியாது என்று நான் உறுதியாகப் புரிகிறேன்... சமுதாயம் எல்லா வகையிலும் இந்த இயக்கத்துக்குத் தொண்டாற்ற வேண்டும். நிதி ரீதியாகவும் தொண்டாற்றுவதில் சோம்பல் இருக்கக் கூடாது. பாருங்கள்! உலகில் எந்த இயக்கமும் சந்தா இல்லாமல் இயங்குவதில்லை... எல்லாத் தூதர்களின் காலத்திலும் சந்தாக்கள் திரட்டப்பட்டன. எனவே, நமது ஜமாஅத் மக்களும் இந்த விஷயத்தைக் கருத்திற் கொள்வது அவசியமாகும். இந்த மக்கள் முறையாக ஆண்டு முழுவதும் ஒரு ஒரு பைசாவாகக் கொடுத்தாலும் பல விஷயங்கள் நடக்க முடியும்.

*இது தொடர்பாக ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் தியாகங்கள் தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சில வழிகாட்டல்களை முன் வைத்தார்கள்.* **ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு இவ்வாறு கடிதம் எழுதினார்கள்:** “பெருமதிப்பிற்குரிய தலைவர் அவர்களே! வழிகாட்டியே! என் சொத்து, செல்வங்கள் அனைத்தும் மார்க்கத்தைப் பரப்புவதற்காக செலவாகிவிட்டால், நான் எனது வாழ்வின் குறிக்கோளை அடைந்து விட்டேன் என்று நான் முழுவதும் நேர்மையாகப் பணிவுடன் கூறுகிறேன்.”

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் வக்ஃபே ஜதீத் மற்றும் தஹ்ரீகே ஜதீதுக்கான திட்டங்களை அறிவித்தபோது, மிகவும் ஏழையான மக்கள் சிலர் சிறிதுசிறிதான தொகையை சமர்ப்பித்தார்கள். எங்களிடம் என்ன இருந்ததோ அதை நாங்கள் சமர்ப்பித்து விட்டோம்’ என ஒருவர் கோழியைக் கொண்டு வந்தார் என்றால், ஒருவர் கோழி முட்டையைக் கொண்டு வந்தார்.

*இது தொடர்பாகவே ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் ஹஸ்ரத் கலீஃபா ரஷீதுத்தீன் சாஹிப் (ரலி) அவர்களின் பொருள் தியாகங்களின் விபரத்தை எடுத்துரைத்தார்கள். மேலும், சஹாபா (ரலியல்லாஹு அன்ஹும்) மற்றும் சான்றோர்களின் சில அறிவிப்புகளை முன் வைத்த பிறகு கூறினார்கள்:* **இன்றும் நமக்கு இந்த முன்மாதிரிகள் ஆங்காங்கே கிடைக்கின்றன. இந்த ஆன்மா நமக்கு இன்றும் அஹ்மதிகளிடம் தென்படுகிறது.**

*இதற்குப் பிறகு, ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் மார்ஷல் ஐலாந்து, கஸாகிஸ்தான், கேம்ரூன், நாயிஜர், கேம்பியா, தன்ஸானியா, செக் குடியரசு போன்ற நாடுகளின் கலப்பற்ற தன்மை மற்றும் தியாகங்களின் சில நிகழ்வுகளை முன் வைத்தார்கள். ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:-* **இந்தியாவில் இருந்து அங்குள்ள இன்ஸ்பெக்டர் சாஹிப் ஒருவர் எழுதுகிறார்கள்:** நண்பர் ஒருவரின் வக்ஃபே ஜதீத் சந்தா 24 ஆயிரமாக இருந்தது. சில நாள்கள் எஞ்சியிருந்தன. அவர்களிடம் என்னிடம் சிறிது தொகை இருந்தது. அதை அவர் ஒரு முக்கியமான பணியில் கொடுக்க வேண்டியிருந்தது. அவர்கள் அல்லாஹ்வின் மீது தவக்குல் வைத்து தொகையைச் சந்தாவில் செலுத்தி விட்டார்கள். அடுத்த நாளே அவர்களுக்கு எங்கோ மாட்டியிருந்த வியாபாரத்தின் ஒரு மிகப் பெரும் தொகை திடீரென்று கிடைத்து விட்டது.

ஆக, பாருங்கள்! அல்லாஹ் இவர்களிடம் கூறினான்: நீ எனக்காக பொருள் மீதான அன்பை விடுகிறாயா! சொந்தத் தேவைகளை விடுகிறாயா! ஜமாஅத்தின் தேவைகளை முழுமைப்படுத்த முயற்சி செய்கிறாயா! அப்போது நான் உனக்கு உதவி செய்கிறேன். ஆக, இவ்வாறு அல்லாஹ் உதவி செய்கிறான்.

ஜமாஅத்தின் செலவுகள் செய்யப்படுகின்றன. உலகம் முழுவதும் நம்முடைய மிஷன்கள் இருக்கின்றன. தஹ்ரீகே ஜதீத் மற்றும் வக்ஃபே ஜதீதின் சந்தாக்கள் மட்டுமே தலைமையகத்துக்கு வருகின்றன. மற்றவையோ உள்ளூர் நாடுகளிலேயே செலவாகி விடுகின்றன. இந்த செலவுகள் அனைத்தும் இந்த சந்தாக்கள் மூலமாகவே செய்யப்படுகின்றன.

ஆப்பிரிக்க நாடுகளில் ஏழ்மை உள்ள இடங்களிலும் அவர்கள் சந்தா கொடுக்கிறார்கள்தான்; ஆனால், ஏழ்மையின் காரணமாக அங்கு பள்ளிவாசல்கள், மிஷன் ஹவுஸ்கள் ஆகியவற்றை நடத்துவற்குத் தொகை தேவைப்படுகிறது. ஆப்பிரிக்காவில் இப்பொழுது 7953 பள்ளிவாசல்கள் உருவாகி விட்டன. 306 பள்ளிவாசல்கள் கட்டப்பட்டு வருகின்றன. 1860 மிஷன் ஹவுஸ்கள் இயங்குகின்றன. தலைமையக முபல்லிக்மார்கள் 400 பேரும், 2000 க்கும் மேற்பட்ட முஅல்லிம்மார்களும் பணிபுரிகிறார்கள்.

இவ்வாறே, காதியான், தென்அமெரிக்கா, தீவுகள் போன்ற இடங்களில் தொகை செலவிடப்படுகிறது. நூல்கள் அச்சிட்டு விநியோகிப்பதற்கான செலவுகள் இருக்கின்றன. இந்த செலவுகள் அனைத்தையும் அல்லாஹ் தனது அருளால் பூர்த்தி செய்கிறான். அல்லாஹ் ஹஸ்ரத் அக்தஸ் மஸீஹ் மவ்வூத் (அலை) அவர்களிடம், 'பொருளையோ நான் உமக்கு வழங்குவேன்' என்றே கூறினான். அவன் அந்த வாக்குறுதிக்கு ஏற்ப பொருளை வழங்கவும் செய்கிறான். எல்லாம் வல்ல அல்லாஹ் ஜமாஅத்துக்கு நாம் இதை சரியான முறையில் செலவில் கொண்டு வருவதற்கு நல்வாய்ப்பு வழங்குவானாக! அல்லாஹ் சரியாக செலவு செய்வதற்கு நல்வாய்ப்பு வழங்குவானாக! இதில் ஒருபோதும் எவ்வித முறைகேடும் ஏற்படாமல் இருக்கட்டுமாக!

*ஹுஸூர் அன்வர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் வக்ஃபே ஜதீதின் கடந்த ஆண்டின் அறிக்கை தொடர்பாக இவ்வாறு கூறினார்கள்:* அல்லாஹ்வின் அருளால் வக்ஃபே ஜதீதின் 67 ஆவது ஆண்டு நிறைவடைந்தது. நிகழாண்டில் உலகளாவிய அஹ்மதிய்யா ஜமாஅத்துக்கு 1,36,81,000 (ஒரு கோடியே முப்பத்து ஆறு லட்சத்து எண்பத்தி ஓராயிரம்) பவுண்டு, அதாவது, ஏறத்தாழ 14 மில்லியன் பொருள் தியாகத்தை இறைவன் முன் சமர்ப்பிப்பதற்கான நல்வாய்ப்பு கிடைத்தது. இந்த வசூல் கடந்த ஆண்டை விட 7,36,000 பவுண்டு அதிகமாகும். மேலும், இணைந்துள்ளவர்களின் எண்ணிக்கை 15,51,000 ஆகும். அல்ஹம்துலில்லாஹ்!

**வசூல் அடிப்படையில், முதல் பத்து ஜமாஅத்கள்:** பிரிட்டன், கனடா, ஜெர்மனி, அமெரிக்கா, **இந்தியா**, ஆஸ்திரேலியா, மத்திய கிழக்கு நாட்டைச் சேர்ந்த ஒரு ஜமாஅத், இந்தோனேஷியா, மத்திய கிழக்கு நாட்டைச் சேர்ந்த ஒரு ஜமாஅத் மற்றும் பெல்ஜியம்.

**கலந்து கொள்பவர்களை அதிகரித்ததன் அடிப்படையில் முன்னணி வகிக்கும் ஜமாஅத்கள்:** பாக்கிஸ்தான், நைஜீரியா, கேம்ரூன், சிராலியோன், கேம்பியா மற்றும் காங்கோ பராஸ்வீல்.

**இந்தியாவின் முதல் பத்து மாநிலங்கள்:** கேரளா, **தமிழ்நாடு**, ஜம்மு காஷ்மீர், கர்நாடகா, தெலுங்கானா, ஒடிஷா, பஞ்சாப், மேற்கு வங்காளம், மஹாராஷ்ட்ரா மற்றும் உத்திர பிரதேசம்.

**இந்தியாவின் முதல் பத்து ஜமாஅத்கள்: கோயம்புத்தூர்,** காதியான், ஹைதராபாத், கோழிக்கோடு, மஞ்சேரீ, பெங்களூரு, **மேலப்பாளயம்**, கொல்கத்தா, கேரங்க் மற்றும் கருளாயீ.

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்...) அவர்கள் கூறினார்கள்:* எல்லாம் வல்ல அல்லாஹ் தியாகம் செய்யக்கூடியவர்களின் செல்வங்களிலும் வாழ்நாளிலும் அளவற்ற பரக்கத் ஏற்படுத்துவானாக!

*புத்தாண்டு தொடர்பாக துஆக்கள் பற்றி வலியுறுத்தியவாறு கூறினார்கள்:-* இவ்வாறு துஆ செய்யுங்கள்: இந்த 2025 ஆம் ஆண்டு ஜமாஅத்திற்கு அருள்களைக் கொண்ட ஆண்டாகட்டுமாக! மேலான அல்லாஹ் ஜமாஅத்தை எல்லாத் தீங்கிலிருந்தும் பாதுகாத்து வைப்பானாக! பாக்கிஸ்தானில் பயங்கரவாத அமைப்புகள் எல்லாவித அநீதிகளையும் இழைப்பதற்கு முயற்சி செய்து வருகிறார்கள். அல்லாஹுத்தஆலா அந்த அநீதியிழைப்பவர்களை விரைவில் பிடிப்பதற்கான ஏற்பாட்டை செய்வானாக! அஹ்மதிகளைத் தனது பாதுகாப்பில் வைப்பானாக! ரப்வாவிலும் இந்த மக்கள் பெரிதும் பார்வையை செலுத்தி வருகிறார்கள். அதையும் அல்லாஹ் பாதுகாத்து வருவானாக!

*மேலும், கூறினார்கள்:* துரூது ஷரீஃப் மற்றும் சில துஆக்களின் பக்கம் நான் சில காலம் முன்பு கவனமூட்டியிருந்தேன். இவ்வாறே பாக்கிஸ்தான், வங்காள தேசம், சிரியா, ஆப்பிரிக்கா மற்றும் பிற நாடுகள் இருக்கின்றன. எல்லா இடங்களிலும் அல்லாஹ் அஹ்மதிகளைத் தனது பாதுகாப்பில் வைப்பானாக! அதற்காகத் தானும் அதிகம் துஆக்கள் செய்வது ஒவ்வோர் அஹ்மதி மீதும் கடமையாகும். உங்களுடைய நாடுகளுக்காகவும், உலகின் பொதுவான நிலைமைக்காகவும் மற்றும் போர்களின் சூழ்நிலைக்காகவும் துஆ செய்யுங்கள். அல்லாஹ் அதன் தீய தாக்கங்களிலிருந்து குற்றமற்றவர்கள், அப்பாவிகள் ஒவ்வொருவரையும் பாதுகாப்பானாக!

புத்தாண்டில் இந்த மக்கள் பெரிதும் கொண்டாடுகிறார்கள். ஆனால், ஒவ்வொருவரும் தனது மகிழ்ச்சியை மட்டுமே பார்க்கிறார். மற்றவர்களின் வேதனையைப் பற்றிய உணர்வு அவர்களுக்கு இல்லை. ஏழை சமுதாயங்கள், அநீதிக்குள்ளான மக்கள் ஆகியோர் மீது ஆற்றல் பெற்ற சமுதாயங்கள் அநீதியிழைத்துக் கொண்டே செல்கின்றன.

அல்லாஹுத்தஆலா இந்த ஆண்டில் அந்த அனைத்து ஆற்றல் பெற்ற சமுதாயங்களின் திட்டங்களையும் மண்ணோடு மண்ணாக்குவானாக! மேலும், அல்லாஹ்வின் ஓரிறைமை உலகில் நிலைபெறுவதை நாம் காண்போமாக! அல்லாஹ் நமக்கும் இதற்கான நல்வாய்ப்பு வழங்குவானாக!

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ
اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِیَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ
اللّٰهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِی الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ
وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

(தமிழாக்கம்: மவ்லவி அத்தாவுல் முஃக்னீ)